2010 ஏப்ரல் 8]

32—

கட்டட வசதி

***112780—திரு. சுப. மதியரசன்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளையான்குடியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இளையான்குடியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும்பட்சத்தில், நிலம் கையிருப்பு மற்றும் அரசின் நிதிநிலைமைக்கேற்ப, அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. மதியரசன்.

திரு. சுப. மதியரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் மாணவராய், அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணாவின் இதயத்தை இரவலாகப் பெற்ற தம்பியாய், எத்திக்கும் புகழ் மணக்கும் தித்திக்கும் தேனூறும் தீந்தமிழினத்தின் காவல் அரணாய், மாற்றுத் திறனர்ளிகளின் பாதுகாவலனாய் விளங்கி, மாற்றுத் திறனாளியாகிய என்னை இம்மாமன்றத்தில் அமரச் செய்த தலைவர் முதல்வர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) பெருமைக்குரிய பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், சூரியனோடு போட்டி போட்டுக்கொண்டு பணியாற்றிக்கொண்டிருக்கும் எங்கள் தளபதி அவர்களுக்கும், தென் மண்டல அமைப்புச் செயலாளர்

[2010 ஏப்ரல் 8

மாண்புமிகு மத்திய அமைச்சர் அஞ்சாநெஞ்சர் அவர்களுக்கும், மாற்றுத் திறனாளிகளின் மனம் கவர்ந்த மாநிலங்களவை உறுப்பினர் அவர்களுக்கும், எனது வெற்றிக்காக அயராது உழைத்த எங்கள் மாவட்ட அமைச்சர்கள் மாண்புமிகு கே.ஆர்.பி. அவர்களுக்கும், மாண்புமிகு குடிசை மாற்று வாரியத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், கழக நிருவாகிகளுக்கும், தொகுதி மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை இந்நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு மாண்புமிகு அமைச்சர் அவர்களாகிய தங்கள் திருக்கரங்களால் ஓர் அரிசி ஆலையில் திறந்து வைக்கப்பட்ட நீதிமன்றத்திற்கு தயவு செய்து இந்த நிதியாண்டிலேயே நிதி ஒதுக்கிடுமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்தில் இருக்கக்கூடிய நீதிமன்றங்கள், இளையான்குடி தவிர மற்றவை அனைத்தும் சொந்தக் கட்டடத்திலே இயங்குகின்றன. இளையான்குடி நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுத்துவிட்டால், சிவகங்கை மாவட்டத்தில் அனைத்து நீதிமன்றங்களும் அரசுக் கட்டடத்தில் இயங்குகின்ற முழுமை பெற்றுவிடும் என்று நான் சிவகங்கை நீதிமன்ற விழாவிலும் தெரிவித்தேன். இந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு எல்லாவிதமான தகுதியும் உண்டு. அந்த மாவட்ட மாண்புமிகு அமைச்சர் திரு. பெரியகருப்பன் அவர்கள் மூன்று, நான்கு முறை இது குறித்து என்னிடத்திலே விவாதித்திருக்கிறார்கள். எனவே, முன்னுரிமைப் பட்டியலில் இடம் தந்து இளையான்குடியில் நீதிமன்றம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. மதியரசன்.

திரு. சுப. மதியரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக்க நன்றி.

2010 ஏப்ரல் 8]

முற்பகல் *9—45*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள், நான் எழுப்பிய வினாவிற்கு திருக்கழுக்குன்றத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் நீதிமன்றத்திற்குக் கட்டடம் கட்டித் தரப்படும் என்ற உறுதியை இங்கே பேரவையிலே அளித்தார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இளையான்குடியில் பேசிய செய்தியை இங்கே சொன்னார்கள். அதேபோன்று, சட்டமன்றத்திலே அறிவித்தபடி இந்த ஆண்டே இந்தக் கட்டடம் கட்ட அரசு நிதி ஒதுக்கும் என்ற அறிவிப்பினை அறிவிக்க வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளையான்குடி நீதிமன்றம் ஒரு rice mill—ல் நடக்கிறது. மிகவும் கொடுமை. அதனாலே பொதுவாக ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்ற நீதிமன்றங்களுக்கு அரசு முன்னுரிமை கொடுக்கும். அது திருக்கழுக்குன்றத்திற்கும் பொருந்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஆ. அங்கையற்கண்ணி.

செல்வி ஆ. அங்கையற்கண்ணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்திலுள்ள சங்கராபுரம் தொகுதியில் நீதிமன்றம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அது குறித்து அரசுக்குத் தெரியுமா? அது குறித்து அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னால் சொன்ன விடை இந்தக் கேள்விக்கும் பொருந்தும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் இருக்கின்ற நீதிமன்றக் கட்டடம் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். ஒரு ஏக்கர் மற்றும் 84 சென்ட் அளவிற்கான நிலம் சென்ற மாதம் மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதிபதி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நீண்டகாலமாக நிலுவையில் இருக்கின்ற இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே வாக்குறுதி தந்திருக்கிறார்கள். எனவே, இப்போது வால்பாறையில் சொந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கி, அதனைக் கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும் என்று சொல்லியிருக்கிறேனேதவிர, வாக்குறுதி என்று அல்ல. அதாவது, வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்ற நீதிமன்றங்களுக்கு முன்னுரிமை தந்து கட்டடங்கள் கட்டித் தருவதற்கு அரசு முன்வரும் என்று சொல்கிறேன். அதற்காக, தமிழ்நாட்டில் இருக்கிற வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்ற எல்லா நீதிமன்றங்களுக்கும் ஒரே ஆண்டில் கட்டடம் கட்டித் தர முடியாது. அதிலும் முன்னுரிமை வேண்டும். காரணம், நிலம் இருக்க வேண்டும். அரசாங்கத்திலே நிதி இருக்க வேண்டும். இவை இரண்டும் இருந்தால் முதலமைச்சர் அவர்களின் ஆணையினைப் பெற்று அந்த ஊர்களில் நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு அறிவிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்த நீதிமன்றத்தினை நான்கூடப் பார்வையிட்டேன். அது வால்பாறை மலையில் உள்ளது. வருடத்தில் பாதி நாட்கள் மழையும், பனியும் இருக்கிற இடம். அது ஒழுகுகிற நிலையில் இருக்கிறது. எனவே, அதையும் அரசு கவனத்தில் கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

2010 ஏப்ரல் 8]

திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராசிபுரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்காக நிலங்கள் எல்லாம் கையகப்படுத்த நீதித் துறையின்மூலமாக அந்த இடத்தை எல்லாம் பார்வையிட்டிருக்கிறார்கள். இன்னும் பணிகள் தொடங்கப்படாத நிலையில் உள்ளது. இந்த ஆண்டு அந்தப் பணியைத் தொடங்கி செய்துதர முடியுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கு அரசு ஒரு ஊருக்கு அறிவிக்கலாம். ஆனால் எந்த இடத்தில் கட்டுவது என்பதை உயர் நீதிமன்றம்தான் நிர்ணயிக்க வேண்டும். இடத்தை அவர்கள்தான் தேர்வு செய்து அரசுக்குத் தெரிவிக்கவேண்டும். ஆகையினால், ராசிபுரத்தில் நாங்கள் நீதிமன்றம் கட்ட வேண்டுமென்று சொன்னாலும் இடம் சரியாக அமையாத நிலைமை. கிடைக்கின்ற இடம் உயர் நீதிமன்றத்திற்குத் திருப்திகரமாக இருக்க வேண்டும். அதிலேதான் பல இடங்களிலே, இன்னும் தகராறு இருந்துகொண்டிருக்கிறது. அவற்றிலே ஒன்று ராசிபுரம். இடம் கிடைத்தால் விரைவில் உயர் நீதிமன்றத்தினுடைய அனுமதியினைப் பெற்று, அதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2008 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தில், நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுடைய தொகுப்புரையின்போது, ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டப்படுகின்ற பட்டியலில் திருப்பூர் இடம் பெறாதபோது, இடையிலே அவர்களுடைய கவனத்திற்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வந்து, முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியின்பேரில் அமைச்சர் அவர்கள் திருப்பூருக்கு அறிவித்தார்கள். ஆனால், இரண்டு ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால், உயர் நீதிமன்றத்திலிருந்து சில குழுக்கள் அங்கே வருகின்றன. அவர்கள்

[2010 ஏப்ரல் 8

எதைப் பார்க்கிறார்கள் என்பது அங்கிருக்கிற எங்களைப் போன்ற மக்கள் பிரதிநிதிகளுக்குத் தெரியவில்லை. ஆனால், இடம் கிடைக்கவில்லை என்று திரும்பிச் சென்று கொண்டே இருக்கிறார்கள்.

ஆகவே, அங்கிருக்கிற நம்முடைய மாவட்ட அமைச்சர், தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் போன்ற மக்கள் பிரதிநிதிகளையும் கலந்து பேசினால் உரிய இடத்தை அடையாளம் காட்டுவதற்கு நாங்கள் முன்வரத் தயார். நம்முடைய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடங்கள் அங்கே நிறைய இருக்கின்றன. ஆகவே, அதுபோன்ற ஒரு ஆரோக்கியமான முறையில் நீதித் துறை இந்தப் பிரச்சினையில் தலையிட்டால் அந்தக் கட்டடம் கட்ட வாய்ப்பிருக்கிறது. அதற்குரிய ஒரு முயற்சியை நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு, விரைவில் அறிவிக்கப்பட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றம் திருப்பூரில் அமைய முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9—50

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்திலிருந்து குழுவினர் வருகிறார்கள், அவர்கள் எதைப் பார்க்கிறார்கள் என்று எங்களுக்கே தெரியவில்லை என்கிறார். எனக்கும் தெரியாது. நாம் அறிவிக்கிறோம். உடனே, அவர்கள் என்ன செய்வார்கள் என்று கேட்டீர்களேயானால், அங்கிருக்கிற District Judge-இடம் சொல்லி இந்த ஊரில் ஒரு இடம் பாருங்கள் என்று சொல்வார்கள். அந்த இடத்தை உடனே அவர்கள் கலெக்டரிடம் சொல்வார்கள், Collector, D.R.O. பார்த்து ஒரு இடத்தைச் சொல்வார்கள். அந்த இடத்தைப் பார்த்தவுடனே High-Court—ல் இருந்து போகிறவர்கள், இந்த இடம் சரியில்லையென்று சொல்லிவிடுவார்கள். சரி, பிறகு வேறொரு இடம் சரியானது என்று வைத்துக்கொள்ளுங்கள், எப்படிக் கட்டவேண்டும் என்று PWD தான் plan போட்டுக்கொடுப்பார்கள். அவர்கள் என்ன சொல்வார்கள், இந்தப் பிளான் சரியில்லை, மறுபடியும் மாற்றுங்கள் என்று சொல்வார்கள். அந்த பிளானுக்கும் இந்த இடம் சரியில்லையென்று வரும். இடத்தைப் பார்த்துக் கொடுத்தார்கள் என்றால் PWD plan போட்டுக் கொடுப்பார்கள். இந்த பிளானுக்கு இந்த இடம் சரியில்லையென்று சொல்வார்கள். மறுபடி வேறு இடத்தைப் பார் என்று சொல்வார்கள். அந்த இடம் சரியில்லையென்றால் 'ரெட்டி

2010 ஏப்ரல் 8]

ஒச்சி, முதலி ஒச்சி' என்று மறுபடி வேறு இடத்தைப் போய் பார்க்க வேண்டும். ஆகையினால் இதிலேயே பாதி நேரம் போய்விடுகிறது. இதில் நாம் தலையிடவே முடியாது. ஆக, அரசாங்கத்திற்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது. காட்டிய இடத்தில் பணம் கொடுத்து கட்டுகிற வேலைதான் நம்முடைய வேலை. ஆகையினால், திரு. கோவிந்தசாமி அவர்கள் சொல்வதைப்போல, அடியேனுக்கும் அதே நிலைதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.*

திரு. எம். அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், பழனி நகரத்தில் 2 இடங்களில் தனித்தனியாக இயங்குகின்ற நீதிமன்றங்கள் ஒரே இடத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றமாக அமைய கடந்த ஆண்டு அறிவிப்புச் செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, அதனடிப்படையில், வரைபடம், திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு உயர் நீதிமன்றப் பதிவாளருக்கும் அனுப்பப்பட்டு,* Committee-*யின் ஒப்புதலும் பெறப்பட்டு அரசுக்கு வந்துள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு இந்த ஆண்டே நிதி ஒதுக்கித் தருவார்களா, முன்னுரிமை தருவார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாம் சரியாகயிருக்கிறது, பழனியிலே எல்லாம் சரியாகயிருக்கிறது. இந்த ஆண்டு தருவார்களா என்று என்னிடம் இப்படிக் கேட்கிறார். இதனுடைய மானியக் கோரிக்கை வரப் போகிறது. அதற்கு முன்னால் தரப்படும், தரமுடியாது என்று என்னால் எப்படிச் சொல்லமுடியும்? மானியக் கோரிக்கையிலே காண்க.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையில்*

பல கேள்விகளுக்கு பதில் அளிக்கிறபோது, அரசு அதற்கு முன்னுரிமை அளிக்கும் என்று பதில் அளித்தார்கள். ஆனால் தொடர்ந்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கும்போது அவர்கள் சொன்னார்கள்; உயர் நீதிமன்றம்தான் முடிவு எடுக்கிறது, அவர்கள்தான் செயல்படுத்த முடியும், நாங்கள் பணம் கொடுப்பதோடு சரியென்று கூறுகிறார்கள். நடைபெறுவது மக்களாட்சி, நமக்கு அதிலே உரிமை நிச்சயமாக உண்டு. உயர் நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய Registrar General அவர்கள் தங்களிடம் கருத்துக் கேட்டு, இந்தெந்த இடம் என்று மக்கள் பிரதிநிதிகளிடம் சொல்கிற உரிமையிருக்கிறது. அப்படி இருக்கிறபோது ஆங்காங்கே இருக்கக்கூடிய நீதிமன்றத்தினுடைய இடங்களைத் தேர்வு செய்வதிலோ, அதுபோல முன்னுரிமை அளிப்பதிலோ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் சார்பாக Registrar General அல்லது உயர் நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி இவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி, இந்த அவையினுடைய மாண்பைக் காப்பாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

நேற்றுக்கூட கொடுத்த ஒரு கேள்விக்குப் பதில் சொல்கிறபோது— M.L.A., பெயரும் M.P. பெயரும் போடவேண்டுமென்று அரசாணை இருக்கிறது "G.O. No. 1277, dated 1-8-1989-ல் the local M.L.A., M.P. of the Constituency in which the Government function is organized, the concerned M.L.A., M.P. should be invited. The local M.L.A., M.P. should be invited to participate in the function and their names may be printed in the invitation cards. In the Government functions only the temporary name boards need be opened and subsequently the names of the persons who have actually participated in the function alone should be engraved in the stone to be permanently fixed in the building." என்று 1989 ஆம் ஆண்டு அரசாணை போடப்பட்டிருக்கிறபோது உச்ச நீதிமன்றமானாலும் சரி, உயர் நீதிமன்றமானாலும் சரி, அவர்களெல்லாம் அரசாணையை மதித்து நடக்க வேண்டும். ஆகவே, அந்தந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய பெயர்களை அழைப்பிதழிலே போட்டு, அவர்களையும் அந்த விழாவிற்கு அழைத்து, அவர்களுடைய பெயர்களையும், அந்தக் கல்லிலே ' engrave—அதாவது, பொறிக்கப்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசாணையை நிறைவேற்றுவதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2010 ஏப்ரல் 8]

முற்பகல் 9—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இரண்டு கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். ஒன்று, நீதிமன்றங்களுக்கான இடத்தையெல்லாம் தேர்வு செய்வதிலே உறுப்பினர்கள் சார்பாக ஏன் நீங்கள் Registrar General—உடன் பேசக்கூடாது என்று கேட்டார். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எங்களிடத்திலே, எங்கள் ஊருக்கு கோர்ட், சப்—கோர்ட் வேண்டுமென்று எழுதிக் கொடுக்கிறார்கள். அந்தக் கடிதங்களை உடனுக்குடன் Home Secretary மூலம் Registrar General அவர்களுக்கு அனுப்பிவிடுகிறோம். நேற்றைக்கு மதியம்கூட நான் நான்கு மணிக்கு Home Secretary, Registrar General அவர்களை வரவழைத்து, இதுவரையிலே M.L.A.க்கள் எந்தெந்த ஊர்களிலே கொடுத்திருக்கிறார்கள்; யார், யார் சப்—கோர்ட் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்; யார், யார் D.M. கோர்ட் கேட்டிருக்கிறார்கள்; யார், யார் J.M. கோர்ட் கேட்டிருக்கிறார்கள்; யார், யார் building வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள் என்ற பட்டியலைக் கேட்டிருக்கிறோம். நாங்கள் கொடுத்த பட்டியலையும், அதன்மேல் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்ற பட்டியலையும் கொண்டு வந்திருக்கிறோம். இதில் பெரும் பகுதி என்னவென்று கேட்டால், அரசாங்கத்திலே நிதி இருந்தும் அந்த நிதியை உடனடியாகச் செலவு செய்து கட்டடம் கட்ட முடியாத அளவிற்குச் சில சிக்கல்கள். High Court—ல் அவர்கள் ஒரு கமிட்டி வைத்திருக்கிறார்கள். ஒரு Building Committee வைத்திருக்கிறார்கள். அந்தக் Committee satisfy ஆக வேண்டுமென்று சொல்கிறார்கள். இதில் இன்னும் சொல்லப்போனால், இன்னும் நான் ஒரு படி மேலே போய் திரு. ஞானசேகரனுக்குச் சொல்கிறேன். நானே உயர் நீதிமன்றத்திற்குப் போய், அங்கேயிருக்கிற Committee—யோடு உட்கார்ந்து பேசி, சீக்கிரம் இதனை முடியுங்கள், உறுப்பினர்களின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியவில்லையென்று என்று பேசியிருக்கிறேன். ஆகையினால், இப்பொழுது பேசி, பேசி — சில ஊர்களில் இடம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. காலையில் செஞ்சியிலிருந்து வந்தார்கள். செஞ்சியிலே கோர்ட் கொடுக்கிறோம்.

ஆனால், இடம் இல்லை. நீங்கள் தானே இடம் பார்த்துக் கொடுக்க வேண்டும். நீங்கள் இப்போது Jail Department வைத்திருக்கிறீர்கள் அந்த இடத்தை எங்களுக்குக் கொடுங்கள் என்று சொன்னார்கள். Jail Department–க்கு கொஞ்ச இடம்தான் இருக்கிறது, அது எப்படியென்று எனக்குத் தெரியாது என்றேன். உடனே Forest Department–ல் இடம் இருக்கிறது என்றார்கள். அங்கே அதிலே கையே வைக்க முடிவதில்லையே?

அடுத்து, அறநிலையத் துறை. "ஹர, ஹர மஹாதேவா" அதிலே இடம் கேட்க முடியாது. வேறு எந்த இடம் கேட்பது? ஆகையினாலே, ஏரி இருக்கிறது, கொடுக்கலாம் என்றார்கள். அங்கே வந்த மஸ்தான் சொல்கிறார், ஏரி case-ல் இருக்கிறது என்றார். நீர் நிலை என்கிறார்கள். இடம் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். ஆகையினாலே, இடம் பார்ப்பது மிகவும் கஷ்டம். இருக்கிற இடங்களை, பல பேருக்கு புறம்போக்கில் பட்டா போட்டு கொடுத்தாகிவிட்டது. ஆகையினாலே, 3 ஏக்கர், 4 ஏக்கர் இடம் வேண்டுமென்று கேட்கிறபொழுது கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, இடத்தைத் தேர்வு செய்து கொடுப்பதிலேகூட நான் சொன்னேன், M.L.A.–வைப் போய் பிடியுங்கள், அந்த M.L.A. சட்டசபையிலே கேட்கிறார். அவர் நிச்சயமாக உங்களுக்கு எப்படியாவது ஏற்பாடு செய்து கொடுப்பார் என்று நேற்றுகூடப் பேசினேன்.

இரண்டாவது அவர் சொன்னது G.O. இந்த G.O–வினுடைய மொத்த உள்ளடக்கத்தையும் நான் ஏற்கெனவே அவர்களுக்குத் தெரிவித்துவிட்டேன். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், I may make a request. I cannot compel them. திரு. ஞானசேகரன் அவர்களுக்குத் தெரியும் ஓரளவிற்குதான் நாம் அவர்களோடு ஒத்துப்போக முடியும். ஆனால், இவ்வளவு உணர்வுகளையும் இன்றைக்குப் பிரதிபலித்து இருக்கிறோம். நல்ல முடிவை அவர்கள் எடுப்பார்கள் என்று இந்த மன்றத்தின் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.